முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**EP No. 42/2024**

**நாள்.07.11.2025**

ம.சா.1 திரு.லெட்சயவாதி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரரை ஒரு தலைபட்சபடுத்தப்பட்டு தீர்ப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏற்பட்ட ஒரு தலைபட்ச தீர்ப்பை ரத்து செய்வதற்கு இந்த எதிர்மனுதாரர் மனு செய்து, அது நிலுவையில் உள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கில் திருவாடானை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. அந்த குற்ற வழக்கில் நான் அரசு தரப்பில் 1வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த குற்ற வழக்கில் இந்த விபத்திற்கு எதிர்மனுதாரர் வாகனம் காரணம் இல்லை என்றும், எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. மேற்படி குற்ற வழக்கில் எதிர்மனுதாரர் மீது தவறு இல்லை என்று விடுதலை செய்யப்பட்டதால், நான் கோரியுள்ள இழப்பீடு கொடுக்க இந்த எதிர்மனுதாரர் கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.07 16:05:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .